முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1010

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.07.2022, செவ்வாய்கிழமை

1. தர்மஞானியே அரங்கா போற்றி
   தவமாக வாழுகின்ற தேசிகா போற்றி
   ஆறுமுகன் என் வழிபாட்டை உலகமெங்கும்
   ஆற்றலாக பரவ அவதரித்த அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
   புகலுவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 21 நாள், 05.07.2022 செவ்வாய்கிழமை)
   ஆற்றல்கூட்டி நாளும்நாளும் அரங்கன் உமக்கு அற்புதத்தை
   ஆறுமுகன் யான் வரமாகத் தந்து வருகின்றேன்
3. வருகவே பிரணவக்குடில் என்பது
   வரலாறு படைக்க வல்ல ஏழாம்படைவீடாகும்
   தருகின்ற அரங்கன் தர்மமெல்லாம்
   தரணியோர்க்கு அருளமுதாகும் என்பேன்
4. என்கவே அரங்கன் குடில் நாடி
   ஏழாம் படை வீட்டில்
   களங்கமற அருளமுது உண்டு
   கருணையாக அரங்கன்பால் தர்மம் வளர உதவிவர
5. வருகின்ற மக்கள் எல்லாம்
   வருமுலகில் தர்மவான்கள் எனும் அடையாளமோடு
   பெருமைபட ஞானவான்களாக மாறி
   பேருலகை மாற்றும் சக்திகளாகவும் ஆவர்
6. ஆகவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
   அரங்கன் தர்மமே கலியின் சிறந்த தர்மம்
   வரங்களென அரங்கன் வழிவழி நடந்து
   வையகத்தார் சன்மார்க்கம் விட்டகலா வண்ணம்
7. வண்ணமுடன் ஞானம் பயில
   வையகமே ஞான லோகமாகும்
   தயவாக அரங்கன் வழிகளை பின்பற்ற
   தரணியே தர்ம லோகமாகி
8. ஆகியே உலகம் பெருமாற்றம் ஆன்மீக ஞான ஆட்சிக்காலத்தை அடையும்
   ஆறுமுகன் என் தலைமை கொண்ட ஆற்றல்மிக்க ஞானசித்தர் காலமாகவும் மாறும்
   மாறுதலை அரங்கனே செய்ய இருக்க
   மக்களே அரங்கனை நோக்கி வர இந்த அற்புதம் நடக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–